Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Justiz- und Polizeidepartement EJPD
Département fédéral de justice et police DFJP
Dipartimento federale di giustizia e polizia DFGP
**Staatssekretariat für Migration SEM**
**Secrétariat d'Etat aux migrations SEM**
**Segreteria di Stato della migrazione SEM**







# சுவிஸ் நாட்டில் நல்வரவாகுக

புதிதாக வருபவர்களுக்கான தகவல்கள்

# உள்ளடக்கம்

5
பல முகங்களைக் கொண்ட ஒரு நாடு
சிறு இடத்தில் பல்கலாச்சாரம்

7
ஒன்றுசேர்ந்து வாழுதல்
சம உரிமையும் மரியாதையும்

9
இறுதி வார்த்தை கூற உரிமையுடையவர்கள் குடிமக்களே
சமஸ்டி ஆட்சியும் நேரடி ஜனநாயகமும்

13
வெற்றிக்கான பாலம்
கல்வி மற்றும் தொழிலுக்கு உயர்ந்த மதிப்பீடு

17
ஒன்றிணைந்து பொறுப்பை சுமத்தல்
சமூகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

# சுவிஸ் நாட்டிற்கு இதயப்பூர்வமாக வரவேற்கின்றோம்

உங்கள் வாழ்க்கையின் ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகிறது. நீங்கள் அநேகமாக சுவிட்சர்லாந்தைப் பற்றி ஒன்றிரண்டு விஷயங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவற்றில் சில உண்மையாக இருக்கலாம், மற்றவை உண்மையில்லாமல் இருக்கலாம். எப்படியிருந்தாலும், பல விஷயங்கள் உங்கள் நாட்டில் இருப்பதை விட வேறுபட்டதாக இருக்கும் என்பதால், அவை புதியதாகவும் அறிந்திராததாகவும் இருக்கும். இந்த மாற்றங்களை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டு உங்கள் புதிய நாட்டை அறிந்துகொள்ளுங்கள். நமது நாடு மற்றும் நமது கலாச்சாரத்துடன் இணங்கிச் செல்வதன் மூலம் மட்டுமே, இங்குள்ள மக்களை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள முடியும். இதைச் செய்வதற்கான முக்கிய வழிகளில் ஒன்று, நமது தேசிய மொழிகளின் ஏதேனும் ஒன்றின் வாயிலாகத் தகவல்தொடர்பைச் செய்வதற்கான தகுதி பெற்றவராக இருப்பது. மொழியைப் பேசுவது அன்றாட வாழ்க்கையைச் சமாளிப்பதற்கும், பயிற்சியை முடிப்பதற்கும், பணியாளர் குழுவில் சேர்வதற்கும், புதிய தொடர்புகளை உருவாக்குவதற்கும், புதிய நட்புகளை உருவாக்குவதற்கும் தேவைப்படுகின்ற கருவிகளை உங்களுக்குக் கொடுக்கிறது. கல்வி, பணியிடம், உடல்நலக் கவனிப்பு மற்றும் எமது அரசியல் அமைப்பு உள்ளிட்ட சுவிட்சர்லாந்தின் அன்றாட வாழ்க்கை பற்றிய ஒரு பூர்வாங்கப் பார்வையைப் பின்வரும் சிற்றேடு உங்களுக்கு வழங்கும். எமது சமூகத்தின் அன்றாட வாழ்க்கையானது, பகிரப்பட்ட மதிப்புகளையும், எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத விதிகளையும் அடிப்படையாகக் கொண்டது. நீங்கள் அவற்றைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும். பல்வேறு கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்களுடன் இணைந்து வாழ்வது சுவிட்சர்லாந்தில் வாழ்க்கையை மாற்றியமைக்கிறது. எனவே, சுவிஸ் குடிமக்கள் மற்றும் சுவிட்சர்லாந்தில் சிறிதுகாலம் வாழ்ந்தவர்கள் இருவருமே பல சவால்களை எதிர்கொள்கின்றனர். எல்லோரும் வெற்றிகரமாக ஒன்றிணைந்து வாழ்வதற்கு, பொறுமை, பரஸ்பர மரியாதை மற்றும் “வெளிநாட்டினரை ஒரு பகுதியாகக் கொள்வதற்கு மனமுள்ளவராக இருப்பது மற்றும் சுவிஸ் மக்களின் வெளிப்படைத்தன்மை” ஆகியவை நமக்குத் தேவைப்படுகிறது. எமது அயல்நாட்டவர்கள் மற்றும் ஒருங்கிணைப்புச் சட்டத்திலும் இதுவே குறிப்பிடப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்தை உங்கள் புதிய வீடாக மாற்றுவதற்கான உங்கள் பயணத்திற்கு ஒரு நல்ல தொடக்கத்தை இந்தச் சிற்றேடு உங்களுக்கு வழங்க வேண்டும். உங்களுக்கு சிறந்த வெற்றி கிடைக்க வாழ்த்துகிறோம்!

Karin Keller-Sutter
மத்திய அரசுப் பிரதிநிதி





Samba Kebbeh
தொடருந்து நடத்துனர்



"நான் எனது 21வது வயதில் எனது அன்றைய காதலியும் தற்போதைய மனைவியின் காரணமாக சுவிஸ் நாட்டிற்கு வந்தபோது, கலாச்சார அதிர்வு பெரிதாக இருந்தது. சுவிஸ் மக்கள் மரியாதையானவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், நம்பக்கூடியவர்களாகவும் இருந்தார்கள் - ஆயினும் ஒரு திறந்த மனப்பான்மை இல்லாதிருந்தது. எனது பல்வேறு (தொழில்) விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு திரும்பியபோதுதான் எனக்கு சுவிஸ் கற்பனைக் கதையில் வரும் ஒரு நாடு அல்ல, மாறாக எனது அதிர்ஷ்டத்தைத் தேடுவதற்கு நான் போராட வேண்டும் என்பது தெரியவந்தது. அதன்பின் நான் ஒரு வருடகாலமாக ஒரு பாடசாலையில் மிக ஆழமாக டொச் மொழியைப் பயின்றேன்." இது எனக்குரிய சந்தர்ப்பங்களையும் அத்துடன் முக்கியமாக எனது தன்னம்பிக்கையையும் நன்கு மேன்மைப்படுத்தியது. இப்படியான ஆரம்பச் சிக்கல்கள் இருந்தபோதும் இதன்பின் நான் ஒரு நிறைவுள்ள கம்பிய சுவிஸ் மனிதனாக என்னை மாற்றிக்கொண்டதற்கு, முதலில் எனது தொழில் வழங்குனருக்கு நன்றி கூறவேண்டும். அவர்கள் எனது திறமையில் நம்பிக்கை வைத்து, என்னை முதலாவது ஆப்பிரிக்க தொடருந்து நடத்துனராக சுவிசில் நியமித்தனர். இன்று நான் சுவிசில் வாழ மிகவும் விரும்புவதுடன், இந்த இடைக்காலத்தில் இரு கலாச்சாரத்தையும் சேர்த்து வாழவும் ஒவ்வொன்றிலும் உள்ள நல்லவற்றை தெரிந்தெடுத்து வாழவும் பழகிக் கொண்டுள்ளேன்."

# பல முகங்களைக் கொண்ட ஒரு நாடு

## சிறு இடத்தில் பல்கலாச்சாரம்

சுவிஸ் வளம் நிறைந்த நாடாக இருப்பதற்கு எப்பொழுதும் பல குடியேற்றவாசிகள் பங்களிப்புச் செய்துள்ளார்கள். உதாரணமாக கோத்தாட் சுரங்கம் (Gotthard Tunnel) சுவிசின் ஒரு முக்கிய போக்குவரத்துப்பாதை, முக்கியமாக இத்தாலிய தொழிலாளர்களால் இது கட்டப்பட்டது. மேலும் பல குடியேற்றவாசிகள் இன்று மிகவும் வெற்றிகரமாக இயங்கும் பெரிய தொழில்நிலையங்களை அமைத்துள்ளனர். அத்துடன் இன்றும் சுவிஸ் நாட்டின் பொருளாதாரம் வெளிநாட்டுத் தொழிலாளர்களிலேயே தங்கியுள்ளது.



ⓘ சுவிஸ் குறித்த தகவல்கள்
சுவிஸ் குறித்து அறிய விரும்பும், அனைத்திற்கும்
→ www.swissworld.org

ⓘ சுவிஸ் இணையத்தளம்
சுவிஸ் மற்றும் அதன் திணைக்களங்கள்
→ www.ch.ch

கிட்டத்தட்ட உலகிலுள்ள அனைத்து நாடுகளையும் சேர்ந்த மக்கள் சுவிட்சர்லாந்தில் வசிக்கிறார்கள். நான்கில் ஒருவருக்கு சுவிஸ் கடவுச்சீட்டு இல்லை. மூன்றில் ஒரு திருமணம் இரு நாடுகளுக்கிடையிலானதாக இருக்கிறது. சுவிட்சர்லாந்தில் வசிக்கும் மொத்த மக்கள் தொகை சுமார் 8.4 மில்லியன் ஆகும்.

### சிறிய இடமென்றாலும் மரியாதை மற்றும் மற்றவர்களில் அக்கறை வேண்டப்படுகின்றது

பிரயாணம் செய்பவர்கள் அதிக வேளைகளில் சுவிசின் குறைந்த தூரங்கள் குறித்து ஆச்சரியப்படுவார்கள். ஒரு மூலையில் இருந்து மற்றதற்கு செல்வதற்கு 5 மணித்தியாலங்கள் தேவையில்லை. சுவிசின் மூன்றில் ஒரு பங்கு மக்கள் ஐந்து பெரிய நகரங்களான Zurich, Geneva, Basel, Berne மற்றும் Lausanne மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் வசிக்கின்றார்கள். நாட்டின் அரைவாசிப்பகுதிக்கு மேல் மலைகளாக உள்ளது. அங்கு பத்து விழுக்காடு மக்கள் மட்டுமே வசிக்கின்றனர். ஆகவே நாங்கள் சிறிய இடத்தினுள் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து வாழ்கின்றோம். இதனால் அனைவரும் ஏனையவர்களில் அக்கறை காட்டி வாழ்வது அவசியமாகின்றது.

### ஒவ்வொரு பிரதேசமும் தனது கலாச்சாரத்தையும் தனித்தன்மையையும் பராமரித்து வருகின்றது

சுவிஸ் நாட்டில் நான்கு உத்தியோகப்பூர்வமான அரச மொழிகள் பேசப்படுகின்றன. டொச், பிரெஞ்சு, இத்தாலியம் மற்றும் ராயிடோ-ரொமானிக், எந்தப் பிரதேசத்தில் நீங்கள் தங்கியுள்ளீர்களோ அங்கு வெவ்வேறு மொழிகளைச் சந்திப்பதுடன் வித்தியாசமான வாழ்க்கைமுறையையும் காண்பீர்கள். பல்மொழி மற்றும் பல்கலாச்சாரம் என்பது சுவிசின் அடிப்படை. இது ஒரு நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டது.

### வெற்றியுடன் ஒத்துழைத்து முன்னேறுவதற்கு மொழி முக்கியமாகின்றது

பெரும்பாலான மக்கள் சுவிட்சர்லாந்தின் ஜெர்மன் பேசும் பகுதியில் வசிக்கிறார்கள். மக்கள்தொகையில் சுமார் 65 சதவீதம் பேர் சுவிஸ்-ஜெர்மன் பேசுகிறார்கள். சுமார் 20 சதவீதம் பேர் பிரெஞ்சு மற்றும் 8 சதவீதம் பேர் இத்தாலிய மொழி பேசுகிறார்கள். க்ராபண்டன் மண்டலத்தில் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மட்டும் பேசப்படும் மொழியாக ராயிடோ-ரொமானிக் என்ற மொழி உள்ளது (0.5%). டொச் மொழிபேசும் சுவிசில் உயர்தர டொச் உத்தியோகப்பூர்வ மொழியாக, முக்கியமாக எழுத்து வழக்கில் பாவிக்கப்படுகின்றது. வாய்மொழியில் பேசும்போது பலவிதமான பிரதேசவாரியான பேச்சு வழக்கு மொழி பாவிக்கப்படுகின்றது. வழமையாக பாசலில் பேசப்படும் விதம் சூரிச் கன்ரொனிற்கு வேறுபட்டதாக இருக்கும். பேர்ணில் உள்ளவர்கள் பிறைபேர்க்கில் உள்ளவர்கள்போல் கதைக்க மாட்டார்கள். நீங்கள் கட்டாயம் மிகச் சரியான பிரதேசவாரியான பேச்சுவழக்கை பேசக் கற்றுக்கொள்ள வேண்டும் என இல்லாவிட்டாலும், இந்தப் பேச்சு வழக்கை நீங்கள் விளங்கிக் கொள்வதால் உங்கள் நாளாந்த வாழ்க்கை இலகுவாக அமையும். நாளாந்த வாழ்விலும் தொழில் உலகிலும் நன்கு சிறப்புடன் வாழ்வதற்கு மொழி அறிவு ஒரு முக்கிய நிபந்தனையாகும்.



Sabri Aliu
ஒழுங்குசெய்தவர் தந்தையர் சந்திப்பு



“எனது அயலவர் ஒரு சுவிஸ் நாட்டவர். அவர் எங்களுக்கு குடியிருப்பில் கூடிவாழும் முறையை அறிமுகப்படுத்தியதுடன் எமது கொசோவா பழக்க முறையை சுவிஸ் பழக்கமுறைக்கு ஏற்றதாக உள்வாங்கிக்கொள்ள பார்த்துக் கொண்டார். அவர் இதை மிக இலகுவாக மனிதன் மனிதனுக்கு என்ற முறையில் எவ்வித எதிர்கருத்தும் இல்லாமல் செய்தார். அவரை நான் என்றும் மறக்கமாட்டேன். அனைத்திலும் மேலாக எனது ஐந்து பிள்ளைகள் காரணமாக. நான் அவர்களுக்கு சுவிசில் ஒரு நல்ல ஆரம்பத்தை வழங்க விரும்பியிருந்தேன். எமது குடியிருப்பு என்பது தலைக்குமேல் ஒரு கூரை மட்டும் தேவை என்பதிலும் பார்க்க எனக்கு அதிக அர்த்தத்தைக் கொடுத்துள்ளது. இது உண்மையில் இங்கு வாழும் மனிதர்கள் திருப்தியுடன் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வழியில் தமது பங்களிப்பை வழங்குவது அவசியம் என்பதை காலம் செல்லச் செல்ல உணர்ந்து கொண்டார்கள். ஒருவர் சுவிஸ் நாட்டவராகவோ அல்லது வெளிநாட்டவராகவோ, வயதானவராகவோ அல்லது இளையவராகவோ இருந்தாலும் பரவாயில்லை: ஒருவர் ஒருவரோடு கதைப்பதற்குத் தொடங்க வேண்டும். ஏனெனில் இவ்வாறு மட்டுமே ஒன்றுசேர்ந்து சிலவற்றை மாற்ற முடியும். இந்தப் பார்வையிலேயே எமது தந்தையர் சந்திப்பு ஆரம்பித்தது, தந்தையர்கள் மாதம் ஒருமுறை சந்தித்து, பிரச்சினைகளை ஒன்றிணைந்து தீர்க்க கலந்துரையாடிக் கொள்வோம். இது எமது நாளாந்த வாழ்வை இலகுவாக்கியது. இதில் திறமையானது என்னவென்றால்: அயலவர்கள் நண்பர்களாகிக் கொண்டோம்.”

# ஒன்றுசேர்ந்து வாழுதல்

## சம உரிமையும் மரியாதையும்

உங்கள் நகரத்தில் புதிய அயலவருடன் தொடர்பு கொள்வது அல்லது உங்கள் உள்ளுராட்சி நிர்வாகத்திலுள்ள கழகமொன்றில் அல்லது ஒரு அமைப்பில் சேர்ந்து இயங்குவது தனிப்பட்ட முறையில் உங்களை முன்னேற்றிக் கொள்ளும். இதன்படி உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் பாடசாலை, வேலைத்தலம் அல்லது அலுவலகங்கள், திணைக்களங்களுடன் தொடர்புகொள்வதற்கு உதவக்கூடிய தகவல்களைப் பெற்றுக் கொள்வீர்கள்.



ⓘ சுவிசில் வாழ்தல்
தகவல்கள்
→ www.bwo.admin.ch
> wie wir wohnen > Infoblatt «Wohnen in der Schweiz»

ⓘ பாகுபாடு மற்றும் இனவெறி
தொடர்புகள்
→ www.edi.admin.ch
> Themen > Rassismus > Fachstelle für Rassismusbekämpfung > Recht und Beratung > Anlauf- und Beratungsstellen

இங்கு குடியேறியவர்கள் சுவிஸ் நாட்டின் பொருளாதாரத்திற்கும் அதேபோன்று கலாச்சார செல்வங்களுக்கும் பங்களிக்கின்றனர். ஒன்றிணைந்து வாழ்தல் வெற்றியளிப்பதற்கு ஏதுவாக எமது நாட்டின் குடிமக்கள் சகலரிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுவது என்னவென்றால் அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதுடன் நிதிவிடயத்தில் சுயமாக இருப்பதற்கு முயற்சிக்கின்றனர் என்பதாகும். இது தவிர சமாதானமாக ஒன்றிணைந்து வாழ்வதற்கு சுவிஸ் நாட்டுச் சட்டவிதிகள் மற்றும் அரசியலமைப்புச் சட்ட அடிப்படை விதிகள் மதிக்கப்பட்டு கடைபிடிக்கப்படல் வேண்டும். சகலரும் சமூக வாழ்வில் பங்கெடுத்துக் கொள்வதற்கு ஏதுவாக சம சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.

### சுவிஸ் நாட்டின் முக்கிய அடிப்படைச் சட்டங்கள்

உங்களது பூர்வீகம், இனம், பால், சமயம் அல்லது பாலியல் ரீதியான உங்கள் நிலைப்பாடு காரணமாக நீங்கள் ஒடுக்குதலுக்கு உட்படுத்தப்படலாகாது என சுவிஸ் நாட்டின் அடிப்படைச் சட்டங்கள் உத்தரவாதம் அளிக்கின்றன. ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை உள்ளதோடு உதாரணமாக அவர்கள் தங்கள் தொழிலை தாமே விரும்பியபடி தெரிவு செய்யலாமென்பதுடன் தமது துணைவரை அல்லது துணைவியை தாமாகவே தீர்மானிக்கவும் முடியும். ஒவ்வொரு மனிதரும், தனக்கு விரும்பிய மதத்தையும் உலகநோக்கையும் தானாகவே தெரிவுசெய்ய உரிமையுண்டு. இதே உரிமையை அவர்கள் தம்முடன் சேர்ந்த சகமனிதர்களுக்கும் வழங்க வேண்டும். ஒவ்வொருவரும் சகல ஒடுக்குதல்களுக்கும் எதிராக தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். முரண்பாடுகள் வரும்போது இதற்கான ஆலோசனை நிலையங்கள் இதற்கான தீர்வைக் காண்பதற்கு உங்களுக்கு உதவலாம்.

### எழுதப்பட்டுள்ள சட்டங்களுடன் எழுதப்படாத ஒழுங்குவிதிகளும் உள்ளன

அன்றாட வாழ்வில் அடிக்கடி சிறிய விடயங்கள் கூட, மனிதர்கள் ஒன்றிணைந்து வாழ்வதற்கு முக்கியமானவையாக அமைந்து விடுகின்றன. ஆனால் இந்த அன்றாட ஒழுங்குகளைக் கண்டறிந்து கொள்வது பலவேளைகளில் சிரமமாகி விடுகின்றது. உதாரணமாக: சிலவேளைகளில் உங்களது வீட்டில் குறிப்பிட்ட பட்டியல் ஒன்றில் எந்தக் குடும்பம் எப்போது தமது உடுப்புகளைத் தோய்க்க முடியும் என்பது தீர்மானிக்கப்பட்டிருக்கும். அதை நீங்கள் கடைபிடிக்க வேண்டும். அல்லது பின் மாலை வேளையில் பல்கணியில் சத்தமான வாக்குவாதத்தில் ஈடுபட்டால் அல்லது பிள்ளைகள் படிகளில் விளையாடினால் அயலவர்கள் குறை கூறலாம். அதாவது ஒன்றிணைந்து வாழ்வதற்கு இப்படியான எழுத்தில் உள்ள அல்லது எழுதப்படாத சட்டங்களை நீங்கள் கடைபிடிக்க வேண்டுமென அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இதுபற்றி அறிந்து கொள்ளுங்கள். வீட்டு ஒழுங்குகள்பற்றி உதாரணமாக கேட்டு அறிந்து கொள்ளுங்கள் அல்லது அயலவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். ஒருவரை ஒருவர் மதிப்பதும் திறந்த மனத்துடன் பேசுவதும் நல்ல அயலுறவுக்கான முதற்படியாகும்.



Anna Gruber
மாணவி, இளைஞர் நகரமன்ற உறுப்பினர்



“நன்கு தெரிந்துகொண்டு நோக்கைத் தீர்மானித்து, அவற்றைக் கைவிடாது அத்துடன் அவற்றிற்கு உண்மையுடன் இருப்பது. இது எனக்கும் அதேபோன்று ஏவாக்கும் பொருந்தும், அவள் ஆரம்பக் கல்விக் காலத்தில் மசடோனியனிலிருந்து சுவிசிற்கு எம்மிடம் வந்தாள். எட்டு வயது வெளிநாட்டவளான அவளுக்கு இது மிகவும் கடினமாக இருந்தது. ஆனால் ஏவா விரைவாக கற்றுக்கொண்டாள். அத்துடன் நாங்களும் அவளுடன் கற்றுக்கொண்டோம். அவள் டொச் மொழியை அனைத்திலும் மேலாக கற்றபோது நாங்கள் கவனத்துடன் பொறுமையுடன் இருந்தோம். நாங்கள் ஒன்றாகவும் ஒருவர் மற்றவரிடமிருந்தும் கற்றுக்கொண்டோம். இதனால் நாம் மனித மாண்புடன் வளர்ந்து கொண்டோம். இளைஞர் நாடாளுமன்றிலும் ஒத்துழைத்து முன்னேறுதல் என்ற விடயம் பற்றி கலந்துரையாடப்படுகின்றது. இதன்போது என்னை சிலவேளைகளில் குழப்பமடையச் செய்வது என்னவென்றால், இன்ரிகிறசியோன் எனும் ஒத்துழைத்து முன்னேறுதல் எனும் சொல்லுக்கு அதிகமான வேளைகளில் மொழியைப் படிப்பது அல்லது தலையில் கட்டும் துணியுடன் போவதா அல்லது அது இல்லாமல் போவதா என்பதற்குள் இதை சுருக்கமாக அடக்கிவிடுவதுதான். ஆனால் ஒத்துழைத்து முன்னேறுதல் என்பதன் அர்த்தம் மிக விரிவானது: புதிய நாடு மற்றும் அந்நிய கலாச்சாரத்தை உள்வாங்கி இதற்கமைய வாழப் பழகும் உறுதிகொண்ட மனிதர்கள் தேவைப்படுகின்றார்கள். அத்துடன் மறுபக்கத்தில் அதனை விரும்பி அனுமதிக்கும் சமூகமும் தேவை. ஒருவர் ஒருவரை விளங்கிக் கொள்ளுதல் மற்றும் விட்டுக்கொடுத்தல் போன்றவைகளை சட்டத்தால் ஏற்படுத்த முடியாது.”

# இறுதி வார்த்தை கூற உரிமையுடையவர்கள் குடிமக்களே

## சமஸ்டி ஆட்சியும் நேரடி ஜனநாயகமும்

சுவிஸ் நாடு எவ்வாறு இங்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்து என்பதனை நீங்கள் அறிந்து கொள்வதற்கு அரச மற்றும் சட்ட உரிமைகள் தொடர்பான அடிப்படைத் தகவல்கள் உங்களுக்குத் தேவைப்படுகின்றது: இது பாடசாலை முதல் வரி ஊடாக தனித்தனி கடமைகள் மற்றும் உரிமைகளை உள்ளடக்குகின்றது.

### 26 சுதந்திரமான மாநிலங்கள் ஒன்றிணைந்து சுவிஸ் நாடு உருவாக்கப்பட்டுள்து

கன்ரோன்கள் (மாநிலங்கள்) என அழைக்கப்படும் 26 தனி அலகான அரசுகளைக் கொண்டு உருவானதே சுவிஸ் நாடாகும். கன்ரோன்கள் முன்பு பூரணமான சுதந்திரத்துடன் இருந்தன. இவைகள் பின்னர் படிப்படியாக தாமாகவே தற்போதுள்ள சுவிஸ் நாடாக ஒன்று சேர்ந்து (மத்திய) கூட்டாட்சியிடம் ஒருசில பொறுப்புக்களை ஒப்படைத்துள்ளன. பல விடயங்களில் கன்ரோன்கள் முன்பு போல் இன்றும் சுதந்திரமாக இயங்குகின்றன. உதாரணமாக அவைகளுக்கு தனிப்பட்ட அரசியலமைப்பும் சட்டம் இருப்பினும், இவை மத்திய அரசுச் சட்டத்திற்கு முரண்பாடானதாக இருக்க முடியாது. அத்துடன் இம்மாநிலங்களுக்கென தனியான நாடாளுமன்றங்கள், அரசுகள் மற்றும் நீதிமன்றங்களும் கூட உள்ளன.

### பல விடயங்கள் கன்ரோனுக்குக் கன்ரோன் வித்தியாசமானது

கன்ரோன்கள் தனித்து இயங்குவது சுவிசின் ஒரு முக்கிய தனித்துவமாகும். இதை நீங்கள் உங்கள் நாளாந்த வாழ்வில் மீண்டும் மீண்டும் சந்திப்பீர்கள். உதாரணமாக நீங்கள் உங்கள் குடும்பத்துடன் ஒரு கன்ரோனிலிருந்து இன்னொரு கன்ரோனுக்கு மாறுவீர்களாக இருந்தால், உங்கள் பிள்ளை பாடசாலையில் ஒரு பகுதியாக வேறு விடயங்களைப் படிக்கவேண்டி ஏற்படலாம் அல்லது உங்கள் ஊதியம் ஒரே அளவாக இருந்த போதும், செலுத்தவேண்டிய வரியின் தொகை வேறானதாக இருக்கலாம். அல்லது முன்பிருந்த வசதிகளைப் பெற்ற போதும் மருத்துவக் காப்புறுதிக்கு இனிமேல் அதே தொகை கட்டணம் செலுத்த வேண்டிய தேவை இல்லாது போகலாம்.

### மத்திய அரசு, கன்ரோன்கள் மற்றும் உள்ளூராட்சி நிர்வாகங்கள் அரச செயற்பாடுகளை பகிர்ந்து கொள்கின்றன

சுவிஸ் மூன்று படிநிலைகளில் அமைக்கப்பட்டுள்ளது: மத்திய அரசு, கன்ரோன்கள் மற்றும் உள்ளூராட்சி நிர்வாகங்கள். இதில் மத்திய அரசு உயர்நிலையில் இருந்து கொண்டு அரசியல்சட்டத்தில் தனக்கு தெளிவாக வரையறுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை மட்டும் பொறுப்பேற்று அமுல்படுத்துகின்றது. இதில் நாட்டின் பாதுகாப்பு அல்லது வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் போன்றவை அடங்கும். கன்ரோன்கள் உதாரணமாக பாடசாலை விடயங்கள், காவல்துறை, சுகாதாரப் பராமரிப்பு போன்றவைகளை கவனிப்பதுடன் இவற்றை நிறைவேற்றுவதற்காக வரியையும் தாமாகவே அறவிடுகின்றன. அத்துடன் சுவிசில் இருக்கும் ஏறக்குறைய 2200 உள்ளூராட்சி நிர்வாகங்களும் பெரியளவில் சுதந்திரமாகவே இயங்குகின்றன. உதாரணமாக இவைகளின் பொறுப்பாக, குடியிருப்பாளர்களை கணக்கில் வைத்திருப்பது அல்லது பாடசாலை விடயத்தில் பலவிதமான செயற்பாடுகளை முன்னெடுப்பது போன்றவை இருக்கும்.

### சுயமாக ஒரு பெரிய விடயத்தை முடிவெடுப்பதை குடிமக்கள் அனுபவிக்கின்றார்கள்

நேரடி மக்களாட்சி அரசாங்க முறை நடைமுறையில் உள்ளது. வாக்குரிமை பெற்ற நபர்கள் மத்திய அளவில் →

சுவிசில் முக்கியமானது, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் உங்களது மாநிலத்திலும் உங்களது நகரத்திலும் உங்களது வாழ்வைப் பழகிக் கொள்வதாகும். அங்கு முதலாவதாக முக்கிய வாழ்க்கை விடயங்களான வசிப்பிடம், தொழில் மற்றும் பாடசாலை குறித்து தகவல்களைப் பெற்றுக் கொள்வீர்கள். அனைத்திலும் மேலாக உங்களோடு பேசத் தகுதியான பொறுப்பதிகாரிகளும் தொடர்பு நிலையங்களும் இருப்பதுடன், அவர்கள் உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிக்கக்கூடியவர்களாக இருப்பார்கள்.



ⓘ மத்திய (சமஸ்டி) அரச திணைக்களங்கள்
சுவிசின் மத்திய (சமஸ்டி) அரச சேவை நிலையங்கள்
→ www.admin.ch

ⓘ ஒத்துழைத்து முன்னேறுவதற்கான ஆலோசனை நிலையங்கள்
உங்கள் மாநிலத்தில் நாளாந்த நிகழ்வுகள் மற்றும் கற்கைநெறி வழங்கல்கள் பற்றிய
→ www.sem.admin.ch
> Über Uns > Kontakt > Kantonale Behörden > Ansprechstellen für Integration in den Kantonen und Städten



Bruno Moll
தனித்து செயற்படும் எழுத்தாளர் மற்றும் படத்தயாரிப்பாளர்



“எனது ஆவணப் படங்கள் அனேகமாக உயர்ந்த அளவில் அரசியல் குறித்தே இருக்கும். அரசியல் மயமாக இருப்பதென்பது என்னைப் பொறுத்தவரை உரத்த சத்தமாகக்கத்துவதல்ல, மாறாக மிகக் கவனமாக அவதானித்துக் கொள்வதாகும். தவறான (எதிர்) கருத்துக்கள் வைத்திருப்பவர்களை சந்தித்து அவர்களுக்கான கதவுகளைத் திறக்க வேண்டும், அவைகளை இழுத்து மூடிவிடக்கூடாது - இதுவே எனது கடமை என எண்ணுகிறேன்.
ஒரு சுவிஸ் நாட்டவனாக இல்லாமல் மாறாக சுவிசிற்குள் இருக்கவரும் நபருக்கு ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு கூறுவதாக பின்வருவதை தெரிவிக்க விரும்புகிறேன்: நீங்கள் எமது நாட்டை ஒரு புதியவராக சந்திப்பதுடன் உங்களுக்கு பிடித்தமான பலவற்றை காணமுடியாதுள்ளீர்கள். ஆனால் நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது, எமது மொழியைப் படியுங்கள் எமது மனப்பாங்கை ஆய்வு செய்யுங்கள். நீங்கள் தொடர்புபடுத்துவனவற்றை சந்தியுங்கள், விலக்கிவைப்பவைகளை அல்ல என வாழ்த்துகிறேன். நீங்கள் கேள்விகளைக் கேட்பதோடு, மக்களோடு பேச்சுவார்த்தைகளைத் தேடவேண்டும். நீங்கள் கட்டாயம் எமது மலைகள்மீது ஏறுவதோடு ஞாயிற்றுக்கிழமைகளில் நடந்து செல்லும் மக்களோடு மக்களாகக் கலந்து கொள்ள வேண்டும். நீங்கள் வார இறுதி சந்தைகளிலே பொருட்களை வாங்குவதுடன் எமது ஊடகங்களை வாசிக்க, பார்க்க, கேட்க வேண்டும். சுலபமாகச் சொல்வதானால்: உள்நாட்டு மக்களாக காலூண்ட முயற்சிக்க வேண்டும். இதை நான் எமக்கும் விரும்பி வாழ்த்துகிறேன், அதாவது சுவிஸ் மக்களுக்கும் விரும்பி வாழ்த்துகிறேன்.”

# இறுதி வார்த்தை கூற உரிமையுடையவர்கள் குடிமக்களே

சமஸ்டி ஆட்சியும் நேரடி ஜனநாயகமும்

குறிப்பிட்ட இடைவெளிகளில் பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதோடு மட்டுமல்லாது, சம்பந்தப்பட்ட மண்டலம் மற்றும் நகராட்சி அளவிலும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மேலும் அவர்கள் வரித் தொகை மற்றும் கட்டணங்கள் அல்லது சாலைகளின் தளவமைப்பு, மேலும் சுவிட்சர்லாந்து சர்வதேச அமைப்புகளில் உறுப்பினராகச் சேர்வது அல்லது பிற மாகாணங்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்காகவும் வாக்களிக்கிறார்கள். 18 வயது நிரம்பிய சுவிஸ் குடிமக்கள், சுவிட்சர்லாந்தில் உள்ளவர்கள் அனைவரின் மீதும் தாக்கம் ஏற்படுத்துகின்ற விஷயங்களைத் தேர்ந்தெடுக்கவும் வாக்களிக்கவும் முடியும்.

### சேர்ந்து செயற்படுவது முக்கியமானதும் விரும்பத்தக்கதுமாகும்

சுவிசில் சேர்ந்து செயற்படுவதற்கு பல விதங்களில் சந்தர்ப்பங்கள் உள்ளன. உதாரணமாக ஒரு பெற்றோர் சங்கத்தில் உறுப்பினராகலாம் அல்லது ஒரு குடியிருப்பாளர் சங்கத்தில் சேர்ந்து கொள்ளலாம். இதைவிடவும் கண்டனங்கள் மற்றும் குறைபாடுகளைத் தீர்மானிக்கும் வல்லமை கொண்ட நபர்கள் ஒரு முறைப்பாட்டு வடிவமாக (கையொப்பம் சேகரித்து) அரச திணைக்களங்களுக்கு கையளிக்கலாம். ஒரு சில கன்ரோன்கள் மற்றும் நகர நிர்வாகங்களில் நீண்ட காலம் வசிப்போருக்கு அரசியல் உரிமைகள் உள்ளன, உதாரணமாக தேர்தல் அல்லது வாக்கெடுப்பில் கலந்து கொள்ளும் உரிமை. உங்கள் நகர நிர்வாகத்திடம் இதுபற்றி கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

### அனைத்து முக்கிய அரசியல் சக்திகளும் அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் பெறுகின்றன

சுவிஸ் அரசாங்கம் 7 உறுப்பினர்களைக் கொண்டதுடன் இதை Bundesrat என அழைப்பர். இதை நாடாளுமன்றம் தெரிவு செய்வதுடன் இதில் பெரிய அரசியல் கட்சிகளின் பெண்பிரதிநிதிகளும் ஆண்பிரதிநிதிகளும் அடங்கியிருப்பர். இந்த Bundesrat உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றால் ஒவ்வொரு முறையும் ஒருவருட காலத்துக்கு பெண் அல்லது ஆண் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். நாடாளுமன்றம் இரு அவைகளைக் கொண்டது: தேசிய அவை (Nationalrat), இது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது, மாநில அவை (Ständerat) இது கன்ரோன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது. இவை ஒன்றுசேர்ந்து மத்திய நாடாளுமன்றாக (Vereinigte Bundesversammlung) உள்ளது.

அனைவருக்கும் சம உரிமையும் சம கடமையும் சுவிஸ் ஒரு அரசியலமைப்புச் சட்டத்தினை அடித்தளமாகக் கொண்ட சட்டத்திற்கு உட்பட்ட நாடு. இதன் அர்த்தம், எமது நாட்டின் குடிமக்கள் மட்டும் சட்டத்தைக் கவனத்திற்கொள்ள வேண்டும் என்பது மட்டுமில்லாது, மாறாக அரசாங்கமும் நடைமுறையிலிருக்கும்; சட்டத்தினை தானாகவே கடைபிடிக்க வேண்டும். நீதிமன்றங்கள் அரசாங்கத்திற்கும் மற்றும் நாடாளுமன்றத்திற்கும் அப்பாற்பட்டு சுதந்திரமானவை. எவ்வாறான அடிப்படை உரிமைகளும் கடமைகளும் இங்கு செல்லுபடியாகும் மற்றும் இவற்றை எப்படி சுவிஸ் ஒழுங்கமைப்புச் செய்துள்ளது என்பவை, சுவிஸ் (மத்திய) அரசமைப்புச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.



ⓘ அரசியல் அமைப்புமுறை பொதுவான தகவல்கள்
→ www.ch.ch

ⓘ சுவிஸ் அரசியலில் ஒரு பார்வை பிரசுரம் "மத்திய அரசின் சிறு விளக்கம்"
→ www.bk.admin.ch
> Dokumentation > Der Bund kurz erklärt



Vasco Belo
சுவிஸ்போர்த்துக்கேய குடும்பம்



"சுவிஸ் நாட்டில் தொழிற்கல்வி கற்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் முன் உதாரணத்துக்குரிய ஒன்றென நான் கருதுகிறேன். இது பல இளையோர்களுக்கு கல்வியின் பின் தொழில் உலகுக்குச் செல்வதனை இலகுவாக்குகின்றது.
எனது பூர்வீக நாடாகிய போத்துகலில் தொழிற்கல்வி பாடசாலையூடாக மட்டுமே கற்பிக்கப்படுகின்றது, இதனால் நடுத்தரக் கல்வியைப் பெறாத மாணவர்களுக்கு நல்ல தொழிற்கல்வியைத் தெரிவுசெய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காமல் விடுகின்றது.
எமது பிள்ளைகளுக்கு ஒரு நல்ல எதிர்காலம் அமைவதை நாம் அதிகம் விரும்புகிறோம். இதற்காக நாம் பாடசாலை மற்றும் தொழிற்கல்வியில் பங்கெடுப்பதோடு ஒவ்வொரு பிள்ளையின் திறமையிலும் உதவிசெய்கிறோம். ஏனென்றால் யாருக்கு தொழிற்கல்வி இல்லையோ, விரைவில் அவர் தொழில் இன்றி இருக்க நேரிடும் - இது யாருக்கும் நடக்கலாம் அவர் எங்கிருந்து வந்திருந்தாலும்.
எமது குடும்பத்தில் பிரெஞ்சு மொழியை மட்டுமே பேசுகிறோம் - இது குறித்து நான் சிறிது வருத்தப்படுகிறேன். எனது மனைவி சுவிஸ் பிரஜை என்பதாலும் போத்துக்கீசமொழி கதைக்க மாட்டார் என்பதுடன் நான் றொமான்டியில் வளர்ந்தபடியால் இது இயல்பாகவே அமைந்து விட்டது. ஆனால் நாங்கள் குடும்பத்தில் போத்துக்கேய விழாக்களைக் கொண்டாடுவதுடன் விடுமுறையையும் அங்கு கழித்துக்கொள்வோம், அங்கு பிள்ளைகள் விளையாட்டாகவே எனது தாய்மொழியைக் கற்றுக்கொள்ள வாய்ப்புண்டு."

# வெற்றிக்கான பாலம்

## கல்வி மற்றும் தொழிலுக்கு உயர்ந்த மதிப்பீடு

கட்டாயமாக கற்கவேண்டிய பாடசாலை நிறைவின்பின் ஒரு தராதரமுள்ள தொழிற்கல்வியை மேற்கொள்வது சுவிசில் வழமையானது. அண்ணளவாக 90 விழுக்காடு அனைத்து இளையோர்களும் ஒரு தொழிற்கல்வியை அல்லது உயர் கல்வியை கற்று சித்திபெற்று முடிக்கின்றனர். இது தொழில் சந்தையில் சந்தர்ப்பங்களை அதிகமாக்குவதுடன் பின்னரான தொழில் வாழ்வில் தெரிவு செய்யும் வாய்ப்புகளை அதிகமாக்குகின்றது.



ⓘ சுவிசில் பாடசாலை முறைகள் குறித்த தகவல்கள் மற்றும் முகவரிகள்
→ www.edk.ch
Political bodies > To the list of EDK members
→ www.educa.ch
Bildungsraum Schweiz > Bildungssys-tem

ⓘ தொழில் தெரிவுசெய்வதற்கான உதவி தொழில் குறித்த ஆலோசனை
→ www.berufsberatung.ch

ⓘ தொழிற்கல்வி அடிப்படை தொழிற்கல்விக்கான தகவல்
→ www.berufsbildungplus.ch

தொழிற்கல்வி மற்றும் தொழில் என்பன சுவிசில் ஒரு பெரிய அர்த்தத்தைக் கொடுக்கின்றது. அனைத்து பிள்ளைகள் மற்றும் இளையோர்களும் அத்துடன் பெரியோர்களும் அவர்களுக்கிருக்கும் திறமைக்கேற்றவாறு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

### பிறந்ததிலிருந்து ஊக்குவிப்பு

பிள்ளைகள் பேசுவதில் விருத்தியடைவது முக்கியமானது. முன் ஊக்குவிப்பு சமமான சந்தர்ப்பங்களை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. உங்கள் பிள்ளை பாடசாலை செல்வதற்கு முன்பாக உங்கள் மாநில மொழியைக் கற்பதற்கு பல சந்தர்ப்பங்கள் உள்ளன: உதாரணமாக பிள்ளைகள் பராமரிக்கப்படும் Kinderkrippe (பாடசாலை செல்வதற்கு முந்திய பாலர்வகுப்பு) சிறு பிள்ளைகள் காலை தொடக்கம் மாலைவரை இங்கு பராமரிக்கப்படுவார்கள். விளையாட்டுக் குழுக்கள் Spielgruppen (பாடசாலை செல்வதற்கு முந்திய பாலர்வகுப்பு) வயதுப் பிள்ளைகள் மணித்தியால ரீதியாகப் பராமரிக்கப்படுவதுடன் விளையாடக் கற்றுக்கொள்வர். இந்த அரச அல்லது தனியார் நிலையங்கள் உங்கள் பிள்ளையின் பராமரிப்பை காலவரையறையுடன் கட்டாயம் செல்ல வேண்டிய பாடசாலைவரை பொறுப்பெடுப்பதுடன் அதன் பின்பு பாடசாலை கல்வியிலும் மாற்றீடாக உதவி வழங்கும் (உதாரணமாக மதிய உணவு, வீட்டுப்பாட உதவி). இந்த நிலையங்களுக்கு போவதற்கு அனுமதிக்கப்படுகின்றது. இது பெரும்பாலும் கட்டணம் செலுத்த வேண்டியவை என்பதுடன் பெற்றோர் பணம் செலுத்துபவை, இதன் கட்டணங்கள் பெற்றோரின் வருமானத்தைப் பொறுத்து இருக்கும்.

### பாலர்வகுப்பு (Kindergarten), பிள்ளைகளை பாடசாலைக்குத் தயார்படுத்துகின்றது

மண்டலத்தைப் பொறுத்து, ஒரு விதியாக, மழலையர் பள்ளிகள் குழந்தைகளை நான்கு வயதிலிருந்து சேர்த்துக்கொள்கின்றன. அரசு மழலையர் பள்ளியில் சேர்ப்பதற்கு கட்டணம் கிடையாது. மழலையர் பள்ளி என்பது ஒவ்வொரு மண்டலத்திலும் கட்டாயப் பள்ளிப்படிப்பின் ஒரு பகுதியாக விளங்குகிறது. இது விருப்பத்தெரிவாக இருக்கின்ற ஒருசில மண்டலங்களில், கிட்டத்தட்ட ஒவ்வொரு குழந்தையும் எப்படியாவது அங்கு செல்கிறது. மற்ற குழந்தைகளுடனான தொடர்பு உங்கள் குழந்தையின் மொழி மற்றும் சமூகத் திறன்களை வளர்க்க உதவும். உங்கள் குழந்தையின் மொழித் திறன்களை வளர்ப்பதற்கு வீட்டில் அவருடன் உங்கள் தாய்மொழியில் நீங்கள் பேசுவது முக்கியமாகும்.

### பாடசாலை எவ்வாறு செயற்படுகின்றது?

உங்கள் பிள்ளை பாடசாலை போக வேண்டிய வயது வந்ததும் உங்கள் நகர நிர்வாகம் நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அண்மையாக உள்ள பாடசாலைக்கு இடம் ஒதுக்கி பெற்றோருக்கு எழுத்து மூலம் பாடசாலைக்குப் பதிவு செய்ய வேண்டிய இடம் மற்றும் காலம் என்பவற்றை அறிவிக்கும். சுவிசில் அனைத்துப் பிள்ளைகளும் கட்டாயம் செல்ல வேண்டிய பாடசாலைக்குச் செல்கின்றனர். அரச பாடசாலைகள் இலவசமாக மற்றும் தரமுடைய மிகவும் சிறப்பான அடிப்படைக் கல்வியை புதிய கல்வியாண்டில் வழங்குகின்றன. கட்டாயக் கல்வியானது தொடக்க நிலை மற்றும் இடைநிலை தரம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. தொடக்க நிலை என்பது இரண்டு ஆண்டுகள் மழலையர் கல்வியும், அத்துடன் →

## வெற்றிக்கான பாலம்

கல்வி மற்றும் தொழிலுக்கு உயர்ந்த மதிப்பீடு

கூடுதலாக ஆறு ஆண்டுகளும் சேர்ந்ததாக இருக்கும். இதைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு இடைநிலைக் கல்வி நிலை பின்பற்றப்படுகிறது, இதில் மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பாடங்கள் கற்பிக்கப்படுகிறது.
சுவிசில் கன்ரோன்களே கல்வி விடயங்களுக்குப் பொறுப்பு வகிக்கின்றன. இது எங்கும் ஒரேவிதமாக ஒழுங்குபடுத்தப்படவில்லை. உரிய காலத்தில் முன்கூட்டியே உங்கள் நகர நிர்வாகத்திடமிருந்து இதனை அறிந்து கொள்ளுங்கள்.

### மேலதிக ஊக்குவிப்பு வசதிகள்

மாணவ மாணவிகளுக்கு விசேட ஊக்குவிப்புத் தேவை எனக் கண்டால் கட்டாய பாடசாலை இலவசமான ஊக்குவிப்பு உதவிகளை வழங்கும். பிள்ளைகள் பாடசாலை மொழியில் நன்கு தேர்ச்சியில்லை எனக் கண்டால் அவர்களுக்கும் விசேட ஊக்குவிப்பு வசதி செய்துகொடுக்கப்படும். பாடசாலைக்கு வெளியாக தாய்மொழி படிக்கும் வசதிகளும் உள்ளன. இதற்கு உங்கள் பாடசாலையில் அல்லது உங்கள் மொழி சம்பந்தமாக இயங்கும் அமைப்புக்களை நாடி, தாய்மொழி மற்றும் கலாச்சாரத்தைக் கற்பிக்கும் வசதிகள் உள்ளனவா என அறிந்து கொள்ளுங்கள்.

### பெற்றோர் இல்லாமல் எதுவும் நடக்காது

பாலர் வகுப்பு மற்றும் பாடசாலை போன்றவற்றில் ஒழுங்காக மாலைவேளைகளில் பெற்றோர் தகவல் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இதைப் பெற்றோர் கவனத்தில் எடுத்து, ஆசிரியர்களுடன் தமது பிள்ளைகள் மற்றும் அவர்கள் கல்வி குறித்து கலந்துரையாட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உங்களால் உள்ளூர் மொழியை விளங்கிக் கொள்ள முடியாவிடின் உள்ளக கலாச்சார நிலைய மொழிபெயர்ப்பை கேளுங்கள்.

### கட்டாய பாடசாலையின் பின்பு

சுவிசில் உங்கள் பிள்ளையின் தொழில் மற்றும் சமூகநல எதிர்காலத்திற்கு Sekundarstufe II (இடைநிலை தரம் ஐஐ) சித்தி பெற்றிருப்பது மிக முக்கியமாகும். இதைநோக்கி வித்தியாசமான வழிகள் செல்கின்றன, முக்கியமாக இரண்டு தொடருகின்றன: ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கான தொழிற்கல்வி, அதாவது ஒரு தொழிலகத்தில் தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சி, அல்லது ஒரு மேற்படிப்பிற்கான பாடசாலைக்குச் செல்லுதல் (உதாரணமாக Fachmittelschule, Gymnasium).
உயர்கல்விப் பாதைக்கான முடிவை மாணவ மாணவிகளுடன் அவர்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களும் ஒன்றுசேர்ந்து Sekundarstufe I (இடைநிலை தரத்தின்) முடிவில் (8வது வகுப்பிலிருந்து) அவர்களின் தொழில் விருப்பத்தையும் திறமைகளையும் பொறுத்து தீர்மானிக்கப்படும். தொழில் ஆலோசனை நிலையங்கள் மற்றும் தகவல் மையங்கள் உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் இதனை தெரிவுசெய்வதில் உதவிபுரியும்.

### சுவிசில் தொழிற்கல்வி, ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது

அண்ணளவாக மூன்றில் இரண்டு பங்கு இளையோர்கள் சுவிசில் கட்டாய பாடசாலையின் பின்பு தொழிற்கல்வி பயில்கின்றனர். இப்படியான கல்வி, செயல்முறையில் ஒரு தொழிலகத்தில் ஒரு தொழிலைக் கற்பதையும் தொழில்பற்றிய பாடநெறிகளைக் கற்பதையும் இணைக்கின்றது. அனேகமான தொழிற்கற்கை நெறிகள் 2 முதல் 4 வருடங்களுக்கு இடைப்பட்டு இருக்கும். திறமையாகக் கற்கும் இளையோர் மேலதிகமாக தொழிலில் அதிதிறமைத் தகமையையும் (Berufsmaturität) பெற்றுத் தேறலாம். இது உயர்கல்வி நிலையங்களில் (Fachhochschule) அல்லது பல்கலைக் கழகத்தில் மேலதிக பரீட்சையுடன் உயர் பரீட்சைக்கான வழிகளைத் திறக்கலாம்.

### கட்டாய பாடசாலையின் பின்பு ஒரு தொழிற்கல்வி

ஒரு தொழிற்கல்விக்கான இடத்தைத் தேடும் போது, உரியகாலத்தில் அதாவது ஆகக குறைந்தது கட்டாய பாடசாலை நிறைவு பெறுவதற்கு 1 வருடம் முன்பாகவே நடைபெற வேண்டும். அனைத்து இளையோரும் தமக்கேற்ற தொழிற்கல்வி இடமொன்றினைப் பெற்றுக்கொள்வதில்லை. இப்படியான வேளையில் Brückenangebot-ற்கு செல்ல முடியும். இதுபற்றி பாடசாலையிலோ அல்லது தொழில் ஆலோசனையின் பொழுதோ உங்களுக்கு பொருத்தமானவை பற்றி கேட்டறிந்து கொள்ளுங்கள்.

### பல்கலைக்கழகம் (Tertiärstufe) நோக்கிய தொழில் மற்றும் உயர்கல்வி

உயர்கல்வி நிறுவனங்கள் சுவிசில் பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிலையங்களாகப் (Fachhochschule) பிரிக்கப்பட்டுள்ளன. (உதாரணமாக கல்வியியல், சமூக அல்லது தொழில்நுட்ப உயர்கல்வி நிலையங்களாக). இவைகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் தகைமையாக ஒவ்வொரு உயர் கல்விநிலையத் தரத்திற்கேற்பவும் கற்கைநெறியைப் பொறுத்தும் gymnasiale Maturität அல்லது berufliche Maturität நிபந்தனைகளாக அமைந்திருக்கும்.

### தொழிலின் மகத்துவம்

தொழில்புரிவது மற்றும் பொருளாதாரத்தில் சுதந்திரமாக இச்சமூகத்தில் இணைந்து வாழ்வது சுவிஸ் மக்கள் சமூகத்தில் ஒரு முக்கிய பாரம்பரியமாகக் கருதப்படுகின்றது. தொழில் செய்வதென்பது நாளாந்த வாழ்விற்குத் தேவையான பொருளாதாரத்தினை ஈட்டுவதுடன் பலருக்கு திறமான தன்னம்பிக்கை உணர்வுள்ள ஒருவராக சமூகத்தில் தம்மை நிலைநிறுத்தவும் முன்நிபந்தனையாக அமைகின்றது.

### சுவிசில் ஒரு தாராள மனப்பான்மையுடைய

வயதுவந்தோருக்கும் தொடர்கல்வி முக்கியமானது. தொழிற்கல்வி மற்றும் தொடர்கல்வியைக் கற்பதற்கு பல சாத்தியக்கூறுகள் உள்ளன. இந்த தொழிற்கற்கை நெறிகள் மிகவும் உயர்வாக விரும்பப்படுகின்றன. தொடர்கல்வி வகுப்புகள் அதிகளவில் தனியார் நிலையங்களினாலும் அத்துடன் அரச கல்வி நிலையங்களினாலும் வழங்கப்படுகின்றன.



சொந்த நாட்டு மொழியில் பாடங்கள்
→ www.edk.ch
> Bildungssystem CH > Kantonsum-fragen > HSK-Unterricht

வெளிநாட்டு டிப்ளோமா
வெளிநாட்டு டிப்ளோமாவை அங்கீகரிப்பதற்கான தகவல்களும் முகவரிகளும்
→ www.sbfi.admin.ch
> Education > Recognition of foreign qualifications

தொழில், வதிவிடம் மற்றும் குடும்பம்
புலம்பெயர்தலுக்கான மாநில SEM
→ www.sem.admin.ch
> Entry and Residence

மாநில திணைக்களங்கள்
→ www.sem.admin.ch
> About us > Contact > Cantonal authorities

## தொழிற்சட்டம் அமுலில் உள்ளது

தொழிலாளர்களதும் தொழில் வழங்குநர்களினதும் உரிமைகள் மற்றும் கடமைகள் எழுத்துருவிலான ஒரு ஒப்பந்தப்படி உறுதிப்படுத்தப்பட்டிருக்கும். அதில் அதிமுக்கிய அம்சங்களாக வேலைநேரம், பரீட்சார்த்த காலம், ஊதியம், வேலைநீக்க அவகாசகாலம் அத்துடன் விடுமுறைக்காலம் என்பன ஒழுங்காக குறிப்பிடப்பட்டிருக்கும். ஒருசில தொழில்நிலையங்களைப் பொறுத்தவரை பொதுவாக நடைமுறையிலுள்ள விதிகள் செல்லுபடியாகும் (பொதுவான தொழில் ஒப்பந்தம்). சராசரியாக சுவிசில் ஒருவர் தொழில் செய்யும் நேரம் கிழமைக்கு 42 மணித்தியாலங்களாகும். ஒவ்வொரு வேலைப் பகுதியைப் பொறுத்து வேலைநேரம் 50 மணித்தியாலங்கள் வரை (சட்டப்படி அதிகூடிய வேலைநேரம்) இருக்கலாம். தொழில் வழங்குநரோடு ஒப்பந்தம் செய்த ஊதியத்தொகை வரிகள் கழிக்கப்படாத மொத்த ஊதியமாகும். இதிலிருந்து கட்டாயமாகச் செலுத்தப்படும் சமூகக் காப்புறுதிகள் கழிக்கப்படும். சுவிசில் சட்டரீதியாக எழுத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த ஊதியம் எவ்வளவு என்று இல்லை. பல துறைகளில் தொழில் வழங்குனர்களின் அமைப்புக்கள் மற்றும் தொழிலாளர் சங்கங்கள் பேசி நிர்ணயித்த ஆகக் குறைந்த ஊதியம் பொதுவான தொழில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

## டிப்ளோமாக்களை அங்கீகரித்தல்

சுவிசில் தொழில் வழங்குனர்கள் உத்தியோகப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தராதரங்களை, அதாவது டிப்ளோமா மற்றும் தொழில் சான்றிதழ்களை மிகவும் மதிக்கின்றனர். வேறு எங்கோ பெற்ற உங்களது தொழில்கல்வி அல்லது அனுபவங்களின் சமமான பெறுமானங்களைப் பற்றி தீர்மானிப்பதற்கு பல வித்தியாசமான நிலையங்கள் பொறுப்பு வகிக்கின்றன. இந்நிலையங்கள் நாங்கள் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதனை அறியத்தரும்.

## கள்ளதனமாக வேலை செய்வது

## அனைவரையும் பாதிக்கின்றது

மக்கள் வேலை செய்து, ஆனால் சமூகக் காப்புறுதிகள் மற்றும் வரிகளைக் கட்டாமல் இருக்கின்றாரோ, அவர் கள்ளதனமாக வேலை செய்கிறார். கள்ளதனமாக வேலை செய்வது தொழில் வழங்குனருக்கும் தொழிலாளருக்கும் சட்டப்படி குற்றமாகும் என்பதுடன் அதனால் பலன் ஏதுமில்லை. கள்ளதனமாக வேலை செய்வது உங்கள் சொந்தக்காப்புறுதிப் பாதுகாப்பையும் அதேவேளை மற்றவர்களுக்கான வசதிகளையும் பாதிப்படையச் செய்கின்றது.

## தொழில் செய்தலுக்கும் வசிப்பதற்கும் என்ன அனுமதி உங்களுக்குத் தேவைப்படுகின்றது?

ஐரோப்பிய ஒன்றிய (EU) நாட்டின் அல்லது ஐரோப்பிய தடையற்ற வர்த்தகப் பகுதியின் (EFTA) குடிமகனாக சுவிட்சர்லாந்துக்குள் நீங்கள் நுழைந்திருந்தால், நபர்களின் தடையற்ற இயக்கத்துக்கான ஒப்பந்தம் உங்களுக்குப் பொருந்தும். மாறாக, நீங்கள் வேறொரு நாட்டிலிருந்து வந்திருந்தால் அல்லது தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டவராக அல்லது அங்கீகரிக்கப்பட்ட அகதியாக இங்கு வசித்தால் அயல்நாட்டவர் மற்றும் ஒருங்கிணைப்புச் சட்டம் அல்லது புகலிடச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிப்பிரிவுகள் உங்களுக்குப் பொருந்தும். குடியிருப்பு அல்லது குடும்ப மறுஒருங்கிணைப்புக்காக சுவிஸ் வேலைவாய்ப்புச் சந்தையை அணுகுவதற்குப் பொருந்தக்கூடிய பொதுவான விதிப்பிரிவுகள் பற்றி, புலம்பெயர்தலுக்கான மாநில SEM உங்களுக்குத் தெரியப்ப டுத்தும். அனுமதிகள் வழங்குவது மண்டலங்களின் பொறுப்பாகும். வெவ்வேறு வகையான அனுமதிகளுக்கான சரியான நடைமுறைகள் தொடர்பான விஷ யங்களுக்கு, தயவுசெய்து சம்பந்தப்பட்ட மண்டல அதிகாரியைத் தொடர்புகொள்ளவும்.



Yasar Turgut
வைத்தியர்



“நான் நோயாளர்களை அனேகமாக பலவருடங்களாகத் தொடர்ந்து பராமரித்து வருகின்றேன். ஒருவர் ஒருமுறை வந்து அவரது முன் பிரச்சினைகள் பற்றி தெரியாமல் வைத்தியம் பார்ப்பதைவிட வழமையாக வருபவர்கள் விளக்கும் பிரச்சினைகளை நன்கு கணித்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பமாகின்றது. இது எவ்வாறெனில், உடம்பு மட்டுமல்லாது மாறாக முழு மனிதனும் ஒரு நோயில் பங்கெடுக்கின்றான். இதற்கு ஒரு தனிப்பட்ட கலந்துரையாடல் அல்லது நம்பிக்கை மிகுந்த வைத்தியர் நோயாளி உறவு அதிக பலனைக் கொடுக்கும். வெளிநாட்டவர்கள் ஆண்களோ பெண்களோ எனது சிகிச்சை நிலையத்துக்கு வருபவர்களின் கலாச்சார வித்தியாசங்களை குறைவாக மதிப்பிடாது அவற்றிற்கு அர்த்தம் கொடுத்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களது பிரச்சினைகளை புரிந்து கொள்வது மட்டுமன்றி அவற்றின் ஆழத்தை தெளிவாகக் கிரகித்துக் கொள்ள எனது துருக்கிய பூர்வீகம் எனக்கு உதவி அளிக்கின்றது. பலருக்கு சுவிஸ் சுகாதார நடைமுறையை புரிந்து கொள்வது எளிதாக இல்லை. ஆகவே நான் வைத்திய நிபுணர்கள், வைத்தியசாலைகள் மற்றும் நோயாளர்களுக்கு இடையில் தொடர்பை ஏற்படுத்தி அவர்களை தனிப்பட்ட முறையில் வழிநடத்தி வருகின்றேன்.”

# ஒன்றிணைந்து பொறுப்பை சுமத்தல்

## சமூகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்

எல்லோரும் துன்பத்தால் பாதிக்கப் படலாம். சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டது. எல்லோரும் தங்களின் பங்களிப்பை வழங்குவதற்கான காரணம் இதுதான்: நோயுற்றவர்களுக்கு ஆரோக்கியமானவர்கள், வயதானவர்களுக்கு இளைஞர்கள், ஏழைகளுக்கு செல்வந்தர்கள், குடும்பங்களுக்கு தனித்து வாழ்பவர்கள்.



ⓘ சுவிசில் சமூகப் பாதுகாப்பு
→ www.bsv.admin.ch
> sozialpolitische Themen

ⓘ நோய்கள்
மருத்துவக் காப்புறுதி பற்றிய தகவல்கள்
→ www.foph.admin.ch
> Insurances > Health Insurance

ⓘ தொழில் இழப்பு
என்ன செய்வது?
→ www.jobarea.ch

ⓘ வன்முறை
வன்முறைக்கு எதிரான திணைக்களம்
→ www.ebg.admin.ch
> Themen > Gewalt > Beratungsstellen für Opfer

சுவிசில் ஒரு நல்ல அபிவிருத்தியடைந்த சமூக கட்டமைப்புமுறை உள்ளது. இது, மனிதர்களின் துன்பமான வேளைகளில் நீண்ட காலத்திற்கு எவ்வித பொருளுதவியும் இல்லாமல் தவிப்பதற்கு அனுமதிக்காமல் பார்த்துக்கொள்ளும்.

### ஒருவருக்கொருவர் உதவுவது ஒருபக்கம் அத்துடன் தாமாகப் பொறுப்பு வகித்தல் இன்னொரு பக்கம்

ஒவ்வொரு நபரும் தனக்குத் தானே பொறுப்பு என்பதை உணர்ந்து கொள்வதுடன் அவரவர் சக்திக்கேற்ப நாட்டிலும் சமூகத்திடையேயும் செயற்பாடுகளைநடைமுறைப்படுத்த பங்களிக்க வேண்டும். இது சுவிசின் மத்திய அரசயாப்பிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இயலாமல் போகும் நேரங்களிலே, மத்திய அரசு, கன்ரோன் மற்றும் நகர நிர்வா கங்கள் அதற்குத் தேவையான பாதுகாப்பு நடை முறைகளை எடுக்கின்றன. உதாரணமாக வயோதிப நேரத்தில் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினைகள், அங்கவீனமடைதல் அல்லது நோய்வாய்ப்படுதல், விபத்து அல்லது தொழில் இழப்பு போன்ற வேளைகளில். இதற்கான வசதிகளை வழங்குவதற்கு அனைவரும் தமது காப்புறுதிக் கட்டணங்களையும் வரிகளையும் செலுத்துவது முக்கியம் என்பதுடன் நீங்கள் உங்கள் வாழ்க்கைச் செலவை சொந்தமாக மேற்கொள்ள இயலுமானவற்றை செய்து கொள்ளவும் வேண்டும்.

### சுவிசில் மருத்துவக் காப்புறுதி கட்டாயமானது

யார் சுவிசில் வாழ்கின்றார்களோ, கட்டாயம் ஒரு மருத்துவக் காப்புறுதியை செய்திருக்க வேண்டும். ஆகக் குறைந்தது சுவிசில் வதிவிடம் பெற்று மூன்று மாதத்தினுள் நீங்களும் உங்கள் குடும்பத்தவரும் ஒரு மருத்துவக் காப்புறுதியில் பதிந்துகொள்ள வேண்டும். சுவிசில் அடிப்படை மருத்துவக் காப்புறுதி, அனைத்து வயதுவந்தோர் மற்றும பிள்ளைகளுக்கும் கட்டாயம் என்பதுடன், குறிப்பிட்ட சில வைத்திய நிலையத்தில் வைத்தியரால் செய்யப்படும் சிகிச்சை அதே போன்று வைத்தியரால் எழுதப்பட்ட முக்கிய மருந்துகள் போன்றவைகளின் செலவுகளையும் செலுத்திக்கொள்ளும் என்பதாகும். நீங்கள் ஒவ்வொரு மாதமும் மருத்துவக் காப்புறுதிக்கு ஒரு கட்டணத்தைச் செலுத்துவீர்கள். இந்தக் கட்டணம் நீங்கள் எங்கு வசிக்கின்றீர்கள், நீங்கள் செலவின் ஒருபகுதியை சொந்தமாகச் செலுத்த விரும்புகின்றீர்களா அல்லது நீங்கள் மேலதிகமாக விசேட காப்புறுதி செய்து கொள்ள விரும்புகின்றீர்களா என்பனவற்றில் தங்கியுள்ளது. உதாரணமாக பல வைத்தியம் மேலதிக விசேட வைத்தியம் என்பதிலேயே அடங்கும். அது அடிப்படை மருத்துவக் காப்புறுதியில் அடங்காது என்பதுடன் அதற்கு வேறாக செலுத்த வேண்டும்.

### வேலையிடத்தில் நீங்களும் விபத்துக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்டுள்ளீர்கள்

யார் 8 மணித்தியாலங்களும் அதற்கு மேலாகவும் கிழமையில் வேலை செய்கிறாரோ, அவர் தொழில் வழங்குநரால் விபத்துக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்டுள்ளார். இக்காப்புறுதி விபத்துக்களினால் ஏற்படும் செலவுகளையும் ஊதிய இழப்பீட்டையும் உள்ளடக்குகின்றது. யார் 8 மணித்தியாலங்களுக்குக் குறைவாக வேலை செய்கின்றாரோ அல்லது சொந்தமாகத் தொழில் செய்கிறாரோ,

→

→ அவர் தாமாகவே விபத்துக் காப்புறுதி செய்துகொள்ள வேண்டும்.

### நம்பிக்கையுடைய குடும்ப ஆண் வைத்தியர் அல்லது பெண் வைத்தியரை நீங்கள் தேடுகின்றீர்களா?

சுவிசில் அநேகமான மனிதர்களுக்கு ஒரு குடும்ப வைத்தியர் இருப்பதுடன் நோய் ஏற்படும்போது அல்லது விபத்து ஏற்படும்போது ஒழுங்காக அவரிடம் செல்வார்கள். நோயைப் பொறுத்து அல்லது விபத்து ஏற்பட்டால் குடும்ப வைத்தியர் உங்களை ஒரு வைத்திய நிபுணரிடம் அல்லது ஒரு வைத்திய நிலையத்திற்கு அனுப்பி வைப்பார். இக்கட்டான ஆபத்து வேளைகளில் மட்டுமே நீங்கள் நேரடியாக வைத்திய நிலையத்திற்குச் செல்லலாம்.

### ஒவ்வொரு மனிதருக்கும் தனது உடம்பில் அல்லது உள்ளத்தில் பாதிப்பு ஏற்படாதிருப்பதற்கான உரிமையுண்டு

சுவிசில் எந்த விதத்திலும் வன்முறையைப் பாவிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும். இதில் வீட்டு வன்முறை, இளம் பெண் கத்தரிப்பு அல்லது கட்டாயத் திருமணமும் அடங்கும். நீங்கள் ஒரு ஆபத்தை எதிர்நோக்கும் நிலையில் இருந்தால் இதற்குப் பொறுப்பான துறைசார் நிலையத்தில் உதவிகோரலாம்.

### வயோதிப வேளையிலும், தனியாக விடப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கும் மற்றும் அங்கவீனம் அடைந்தவர்களுக்குமான உதவி

18 வயதிற்கு கூடிய வயதுவந்தோர் சுவிசில் கட்டாயம் வயோதிப மற்றும் தனியாக விடப்படுபவர்களுக்கான காப்புறுதி (AHV) அதேபோன்று அங்கவீனருக்கான காப்புறுதி (IV) செய்திருப்பதுடன் இதற்கான கட்டணமும் செலுத்த வேண்டும். AHV பெண்களுக்கு 64 வயதின் பின்பும் ஆண்களுக்கு 65 வயதின் பின்பும் வயோதிப ஓய்வூதியம் வழங்கும். ஒரு உறுப்பினர் இறந்த பின்னர் தனியாக விடப்பட்டவருக்கான காப்புறுதி அவருக்கு ஓய்வூதியம் வழங்கும். IV இன் நோக்கம், இயலாமல் போனவர்களுக்கு உதவுவதாகும். இதன்படி பாதிக்கப்பட்டவர் தனது தொழிலை தொடர்ந்து செய்வதற்கு அல்லது ஒரு புதிய தொழிலைப் பெறுவதற்கு உதவும். இரண்டும் இயலாதபோது IV ஓய்வூதியம் வழங்கும். AHV மற்றும் IV இன் ஓய்வூதியத் தொகையானது, வாழ்வாதாரதிற்கு வேண்டிய அனைத்து முக்கிய செலவுகளையும் அடக்கியிருக்கும். அப்படியும் போதா விட்டால் குறைநிரப்பும் உதவிகளைக் கேட்டுக்கொள்ளலாம். மேலதிக தேவைகள், வாழ்வதற்குக் கொடுக்கப்படும் தொகைக்கு அதிகமாகினால் ஓய்வூதியமிகுதி ஓய்வூதிய நிதியிலிருந்து வழங்கப்படும். ஓய்வூதிய காப்புறுதிக்கு ஒரு குறிப்பிட்ட வருமானத்துக்கு (அண்ணளவாக 20000 பிராங்குகள் வருடம்) மேல் உழைப்பவர்கள் கட்டாயம் செலுத்த வேண்டும். சொந்தமாக தொழில்புரிபவர்கள் தாமாகவே ஓய்வூதிய ஒப்பந்தம் செய்து கட்டணத்தை செலுத்தலாம். இதற்கும் மேலாக வயோதிப காலத்தில் ஒரு நல்ல வாழ்க்கைக்காக சேமிக்க விரும்பினால் "மூன்றாவது தூண்" என அழைக்கப்படும் ஒரு காப்புறுதியிலோ அல்லது ஒரு வங்கியிலோ வைப்பிலிடுவதன் மூலம் வரி அறவிடப்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம்.

### தொழிலை இழந்தால் என்ன செய்வது?

நீங்கள் வேலை தேடுபவராகவோ அல்லது தொழிலை இழந்தாலோ உங்கள் கன்ரோனிலுள்ள தொழில் தேடித்தரும் நிலையத்தில் (RAV) பதிவுசெய்யுங்கள். அவர்கள் ஒரு புதிய தொழிலைத் தேட ஆலோசனை வழங்குவார்கள். கடைசி 2 வருடங்களில் ஆகக் குறைந்தது 12 மாதங்களாவது வேலை செய்திருந்தால் மட்டுமே தொழில் இழந்தவருக்கான பணத்தைப் பெறலாம் (2010ல் உள்ளபடி) அல்லது கட்டணத்தை செலுத்துவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டமைக்கான காரணத்தை உறுதிப்படுத்த வேண்டும். அனைத்து சொந்தமாகச் செய்யாத தொழில்களும் சுவிசில் தொழில் இழப்பவர்களுக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.

### குடும்பங்களுக்கான மேலதிக உதவிகள்

ஒவ்வொரு தொழில் செய்யும் பெண்ணுக்கும் 14 கிழமை தாய்மை விடுமுறை எடுப்பதற்கு உரித்துள்ளதுடன் இந்த வேளையில் ஒரு தாய்மைக்கான வழங்குதலாக கடைசி ஊதியத்தின் 80 விழுக்காட்டை பெறுவதற்கான உரிமை உண்டு. பிள்ளைகள் உள்ள தொழில் செய்பவர்கள் ஊதியம் எவ்வளவாக இருப்பினும் அடிப்படையாக குடும்ப உதவிப்பணத்தை (Familienzulagen) பெற உரித்துண்டு. இது வேலை செய்யாதவர்களுக்கும் சொற்ப வருமானம் இருக்குமாயின் வழங்கப்படும்.

### இதன் நோக்கம், மனிதாபிமான இருப்பை ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்துவதாகும்

வாழுவதற்குத் தேவையான வருமானம் சில வேளைகளில் போதியதாக இல்லாவிட்டாலும் சமூகக் காப்புறுதிகளும் உதவி செய்ய முடியாது போகும் பொழுதும் சமூக உதவிப்பணம் இந்த இடைவெளியை அடைக்க உதவும். சமூகஉதவிப் பணம் கன்ரோனின் பொறுப்பு என்பதுடன் வழமையாக நகர நிர்வாகத்தால் வழங்கப்படுகின்றது. இது வரிப்பணத்திலிருந்து கொடுக்கப்படுகின்றது.

# அன்பான வாசகர்களே

இந்த விளக்கப் பிரசுரத்திரத்தின் மூலம் சுவிஸ் வாழ்க்கை குறித்து ஒரு முதல் பார்வையை தர முனைந்துள்ளதுடன் உங்கள் புதிய வாழ்விடத்தில் முதல் அடியை எடுத்து வைக்க உதவியுள்ளோம் என நம்புகிறோம். சிலவேளைகளில் உங்களுக்கு மேலதிக கேள்விகள் அல்லது தனிப்பட்ட தேவைகள் இருக்கலாம். கீழே மேலதிக தகவல்கள் மற்றும் தரவுகள் பெறக்கூடிய இணையத்தள முகவரிகள் உள்ளன. தகவல்களைப் பெறத் தாமதிக்க வேண்டாம். இவைகள் உங்களுக்கு பலவழிகளில் உதவக்கூடும். நாங்கள் உங்களுக்கு அதிர்ஷ்டம் மற்றும் திடமான நம்பிக்கை கிடைக்க வாழ்த்துகின்றோம்!

## ஒத்துழைத்து முன்னேறுதல்

மாநில தகுதிவாய்ந்த நடுநிலையம் மற்றும் ஒத்துழைத்து முன்னேறும் பகுதிக்கான மேலதிக முகவரிகள
→ www.sem.admin.ch
Über uns > Kontakt > Kantonale Behörden > Ansprechstellen für Integration in Kantonen und Städten

குடிவரவு தொடர்பான வினாக்களுக்கான மத்திய கூட்டாட்சி ஆணையகம
(EKM)
→ www.ekm.admin.ch

அனைத்து வாழ்க்கைப்பகுதிகளுக்கும் பிற மொழிகளிலான தகவல்கள்→
www.migraweb.ch

பல்கலாச்சார மொழிபெயர்ப்புகள்→
www.inter-pret.ch

## குடிவரவு

புலம்பெயர்தலுக்கான மாநில செயலாளர்

தொழில்/வசிப்பிடம்/குடும்பம் ஒன்று சேர்தல்
→ www.sem.admin.ch
> Entry and Residence

மாநில முகவரிகள்
→ www.sem.admin.ch
> About us > Contact > Cantonal authorities

பிரஜாவுரிமை
→ www.sem.admin.ch
> Entry & residence > Swiss citizenship / Naturalization

மாநில முகவரிகள்
→ www.sem.admin.ch
> About us > Contact > Cantonal authorities

SEM இன் வெளியீடுகள்
→ www.sem.admin.ch
> Publications & services > Publications

## மேலதிக விடயங்கள்

தொழில்
பொருளாதாரத்திற்கான அமைச்சரவைச் செயலகம் seco
→ www.seco.admin.ch
Illegal employment
→ www.keine-schwarzarbeit.ch

கல்வி
மாநிலங்களின் கல்வி ஆணையாளர்கள மகாநாடு EDK
→ www.edk.ch
கல்வி, ஆராய்ச்சி மற்றும புதுமைக்கான மாநிலச் செயலகம் SEFRI
→ www.sbfi.admin.ch

ஒடுக்கப்படல்/இனவெறி/வன்முறை
இனவெறிக்கு எதிராகப் போராடும் விசேட நிபுணத்துவ நிலையம் FRB
→ www.edi.admin.ch
> Themen > Rassismus > Fachstelle für Rassismusbekämpfung

வன்முறைக்கு எதிரான விசேட நிபுணத்துவ நிலையம்
→ www.ebg.admin.ch
> Topics > Violence > Victim Support Switzerland

சுகாதாரம்
சுகாதார மத்திய அரசாங்க அலுவலகம் BAG
→ www.bag.admin.ch
சுகாதாரம் பற்றிய கேள்விகளுக்கு பல மொழிகளிலுமான தகவல்கள்
→ www.migesplus.ch

சமூகக் காப்புறுதி முறை
சமூகக் காப்புறுதிக்கான மத்திய அரசாங்க அலுவலகம் BSV
→ www.bsv.admin.ch
AHV/IV மற்றும் EL குறித்த தகவல்கள்
→ www.ahv-iv.ch

சமூக உதவி
→ www.skos.ch

வசிப்பிடம்
வசிப்பிட வசதிகளுக்கான மத்திய அரசாங்க அலுவலகம் BWO
→ www.bwo.admin.ch

வாழ்க்கைநிலை
→ www.bj.admin.ch
> Gesellschaft > Zivilstandswesen > Merkblätter

அச்சுப்பதிப்புரிமை

வெளியீட்டாளர்
Staatssekretariat für Migration SEM (புலம்பெயர்தலுக்கான மாநில செயலாளர் SEM)

Quellenweg 6, 3003 Berne-Wabern
Telephone 058 465 11 11
→ www.sem.admin.ch

உள்ளடக்கம் மற்றும் எழுதியவர்
Abteilung Integration SEM

அமைப்பு, எழுதி மற்றும் நடமுறைப்படுத்தியவர்
medialink, Zürich
→ www.medialink.net

படப்பிடிப்பு
Patrik Fuchs, Zürich
→ www.patrikfuchs.com

மொழிபெயர்ப்பு
proverb, Biel/Bienne
→ www.proverb.ch
Transpose SA
→ www.transpose.ch

மூல ஆதாரங்கள்
Vertrieb Bundespublikationen BBL
CH-3003 Bern
→ www.bundespublikationen.admin.ch
Artikelnummer 420.002.tam

© SEM / EJPD 2020



